செய்தி வெளியீடு எண். 10-2017 நாள்: 06.01.2017

## விழுப்புரம் மாவட்டம் வியாபாரிகள் அச்சிட்ட செய்தித்தாள்கள் மற்றும் பாலிதீன் கவர்களில் உணவு பொருள்களை பொட்டலமிட்டு வழங்குவதை தவிர்க்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை.

## பொதுமக்கள் அச்சிட்ட செய்தித்தாள்கள் மற்றும் பாலிதீன் கவர்களில் பொட்டலமிட்டு வழங்கும் உணவு பொருள்களை வாங்க வேண்டாம். மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

*****

ஹோட்டல்கள் /டீக்கடைகள்/பேக்கரிகளில் சமைத்த உணவை பொட்டலமிட மடித்துக் கொடுக்க அச்சு பதித்த செய்தித்தாள்கள் மற்றும் காகிதங்களை வியாபாரிகள் பயன்படுத்துகின்றனர். மேலும் எண்ணெயில் பொறிக்கப்பட்ட உணவு வகைகளில் உள்ள எண்ணெயை உறிஞ்சுவதற்கும் செய்தித்தாள்களை அறியாமையால் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்தும்போது அச்சு பதித்த காகிதத்தில் உள்ள காரீயம், காட்மியம் போன்ற இரசாயன பொருட்கள் உணவுப் பொருளில் கலந்து புற்றுநோய், கல்லீரல் பாதிப்பு, மூளை/நரம்பு பாதிப்பு, இரத்த சோகை மற்றும் செரிமான குறைபாடு ஆகிய நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

தற்போது செய்தித்தாள்களில் பொட்டலம் மடிப்பதை தவிர்க்க இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் நிர்ணயம் ஆணையம் (FSSAI) தடை செய்துள்ளது. இதற்கு மாற்றாக வாழை இலை, தேக்கு இலை, பாக்கு மட்டை போன்ற இயற்கை மற்றும் எளிதில் மக்க கூடிய பொருட்களை பொட்டலமிட மற்றும் உணவு வழங்க பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது.

செய்தித்தாள்களில் வடை, பஜ்ஜி, சமோசா, ரொட்டி போன்ற உணவுப் பொருட்கள் மடித்து விற்பனை செய்யக்கூடாது. சூடான டீ, பால், சாம்பார், ரசம் போன்ற சமைத்த உணவு வகைகளை பாலிதீன் கவர்களில் பொட்டலமிட்டு வழங்கக் கூடாது. பாலிதீன் கவர்களில் சூடான உணவுப் பொருட்களை பார்சல் செய்யும்போது பாலிதீன் பைகளில் இருந்து புற்றுநோய் உண்டாக்கும், வேதிப்பொருட்களான ஸ்டைரின், பைபினால் போன்றவை உணவுப்பொருளில் கலந்து புற்றுநோய் மற்றும் இருதய பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

எனவே வியாபாரிகள் அச்சிட்ட செய்தித்தாள்கள் மற்றும் பாலிதீன் கவர்களில் உணவு பொருள்களை பொட்டலமிட்டு வழங்குவதை முற்றிலும் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறுவோர் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006, விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் 2011-ன்படி நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்களும் சமைத்த மற்றும் சூடான உணவுப் பொருட்களை, பாலிதீன் பைகள் மற்றும் செய்தித்தாள்களில் பொட்டலமிடப்பட்டு வாங்குவதை தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.